பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற காரணத்தாலே, இந்த அவை நடவடிக்கையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூறிய காரணங்களை ஏற்று நான் அனுமதி மறுக்கிறேன்.

6. அரசினர் தீர்மானங்கள்.

(i) பேரவை விதி 41 (3) தளர்த்தப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் 17 இருக்கின்றன என்ற காரணத்தாலே விதிகளைத் தளர்த்த வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சட்டப் பேரவையின் விதி 41(3)-ன்படி ஒரே கூட்டத்திலே இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களை எடுத்துக் கொள்வதற்குத் தடையுள்ளதை இன்று தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பு. செ. முத்துச்செல்வன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால் கவன ஈர்ப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

7. கவன ஈர்ப்பு

(i) நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நெசவாளர்களுக்குத் துயர் தணிப்பு

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமுமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பெரும்பகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணித் தேக்கம் ஏற்பட்டு பாங்கில் கடன் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையும் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும்."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சரக்குகள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளனவென்றும், பெரும்பாலான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளிடமிருந்து நடைமுதல் மூலதனக் கடன்களைப் பெற இயலாத நிலையிலுள்ளனவென்றும் அதன் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனவென்றும் மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். துயர் தணிப்பு ஏற்பாடுகள் குறித்தும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.